Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC 554/2023 DW-1**

Name : புருசோத்தமன்
Father / Husband name : ரங்கநாதன்
Village : சலவாதி
Age : 43

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 30.10.2025

Complainant present. Accused present. Both side counsel present.

முதல் விசாரணை ( நேரம் 03.06 - 03.26 )

1. நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். புகார்தாரர் புகாரிலுள்ளவாறு வட்டிக்கு நான் அவரிடம் கடன் வாங்கவில்லை. புகார்தாரருக்கு வழக்கின் காசோலையை நான் கொடுக்கவில்லை. புகார்தாரரை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை, இந்நீதிமன்றத்தில் வழக்கின் முதல் வாய்தா அன்று புகார்தாரரை பார்த்தேன். நெ10, மணியம்கந்தசாமி தெரு, திண்டிவனத்தில் வசிக்கும் டிஆர்எஸ்.பிரபு என்பவர் ஸ்ரீசண்முகி பைனான்ஸ் பிரைவேட் லிமி என்ற நிறுவனத்தில் ஏலச்சீட்டு நடத்திவந்தார். 2013 ல் ஏலச்சீட்டில் நான் சேர்ந்தேன். 2013 ம் ஆண்டு ஏலச்சீட்டுத்தொகை பாதுக்காப்பிற்காக கையொப்பம் மட்டும் செய்து நிரப்பப்படாத இரண்டு காசோலைகளை செக்கியூரிட்டிக்காக டிஆர்எஸ்.பிரபுவிடம் கொடுத்தேன்.

2. காசோலையின் எண் 019366, 019367 ஆகும். 2015 ம் வருடம் சீட்டுத்தொகையை முழுவதுமாக கட்டி முடித்தபின்னர் நிரப்பப்படாத 2 காசோலைகளை திருப்பிக்கேட்டபோது ஸ்ரீசண்முகி பைனான்ஸ் நட்டத்தில் இயங்குவதாகவும், பின்னர் தருவதாகவும் டிஆர்எஸ்.பிரபு சொன்னார். திரும்ப திரும்ப கேட்டபோது நிறுவனத்தில் எந்த பதிலும் சொல்லவில்லை.

காசோலையின் எண் 019366 என்பதை டிஆர்எஸ்.பிரபுவின் நண்பர் பாலாஜி மூலமாக இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளார். காசோலையின் எண் 019367 ஐ டிஆர்எஸ்.பிரபு என்பவர் எஸ்டிசி 59/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. டிஆர்எஸ்.பிரபுவும் அவரின் நண்பர் பாலாஜியும் மோசடியாக இருவழக்குகளையும் என்மீது தாக்கல் செய்துள்ளார்கள்.

3. எஸ்டிசி 59/2024 என்ற வழக்கில் டிஆர்எஸ்.பிரபுவின் குறுக்கு விசாரணையில் இவ்வழக்கின் காசோலை எண் 019366 ஐ அவர்தான் வங்கியில் செலுத்தியதாக சொல்லியுள்ளார். எனவே டிஆர்எஸ்.பிரபு அளித்த புகார் மனு, அவர் கொடுத்த காசோலை, வழக்கறிஞர் அறிவிப்பு, நான் அனுப்பிய பதில் அறிவிப்பு, டிஆர்எஸ்.பிரபுவின் ஸ்ரீசண்முகி பைனான்ஸ்க்கு நான் கட்டிய சீட்டுத்தொகை ஆவணமும் மற்றும் எஸ்டிசி 59/2024 என்ற வழக்கின் குறுக்கு விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலத்தையும் ஆவணமாக தாக்கல் செய்கிறேன். இது பொய்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுகிறேன்.

| எ.சா.ஆ. | தேதி | ஆவண விவரம் | அசல் / நகல் |
|---|---|---|---|
| 1 | 24.07.2013 - 07.05.2014 | ஸ்ரீசண்முகி சிட்பன் பிரைவேட் லிமிட்டடு ஏலச்சீட்டு புத்தகம் | சான்றிட்ட நகல் |
| 2 | 23.02.2015 - 13.12.2015 | ஸ்ரீசண்முகி பைனான்ஸ் ரசீதுகள் எண்ணிக்கை - 5 | சான்றிட்ட நகல் |
| 3 | 18.08.2023 | காசோலை எண் 019367 TMB திண்டிவனம் கிளை | சான்றிட்ட நகல் |
| 4 | 27.10.2023 | TRS பிரபு வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பிய அறிவிப்பு | சான்றிட்ட நகல் |
| 5 | 04.11.2023 | நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு | சான்றிட்ட நகல் |
| 6 | 20.11.2023 | TRS பிரபு என் மீது தாக்கல் செய்த புகார் மனு | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| 7 | 22.10.2024, 15.07.2025, 19.07.2025 | எஸ்டிசி 59/2024 வழக்கில் ம.சா.1 பிரபு முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | சான்றிட்ட நகல் |

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**